அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மேலும் ஒரு கூடுதல் தகவல். போரூர் ஏரியிலிருந்து குடிநீர் இன்னும் நாம் விநியோகம் செய்யவில்லை. அந்த நீரையும் சுத்திகரிப்பு செய்து நாளையிலிருந்து 3 MLD தண்ணீர் எடுத்து, சென்னைக்கு விநியோகம் செய்ய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள். நாளையிலிருந்து அந்தப் பணி தொடங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

4. அறிக்கைகள் அளித்தல்

பொது நிறுவனங்கள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் எஸ். முத்தையா, பொது நிறுவனங்கள் குழுத் தலைவர் அவர்கள்.

டாக்டர் எஸ். முத்தையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு மருத்துவர் என்ற முறையில் உங்களுடைய உடலும், உள்ளமும் நலமுடன் வாழ நான் மனதார வாழ்த்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

டாக்டர் எஸ். முத்தையா: உங்கள் இதயம் இரும்பு என்பது எனக்குத் தெரியும்; ஆனால் உடல் கரும்பு. காரணம் எறும்புகள் உரசுவதும், ஊர்வதும், அதை ஊதி உதிர்ப்பதும் வாடிக்கை. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அறிவாலும், ஆற்றலாலும், ஆளுமைத் திறனாலும் அனைவரையும் மிஞ்சி, விஞ்சி ஒன்றரை கோடி தொண்டர்களின் நெஞ்சில் துஞ்சும் புரட்சித் தலைவி அம்மா அவர்களை நான் வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

2016, 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளுக்கான பொது நிறுவனங்கள் குழுவின் 1 முதல் 10 வரையிலான 10 அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்குப் பணிவோடு சமர்ப்பிக்கிறேன்.